
பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று.




| சந்தா விபரம். | ரூ. அ. |
| --- | --- |
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1-12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

*முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.*

# [வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

**ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.**

**ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.**

| விளம்பர விகிதம். | ரூ. அ |
| --- | --- |
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |

நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

*முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.*

*பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா*
*செய் தொழில் வேற்றுமையான்—குறள்.*

*ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க*
*மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.*

மாலை க | குரோதன-ஹு பங்குனி-மீ கஙி-உ (28—3—26) ஞாயிற்றுக்கிழமை | மலர் சஉ




*மகாத்மா காந்திக்கு ஜே!*

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளி நாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
*கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)*

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

S. இராமநாதன்
*காரியதரிசி, கத்தர் இலாகா.*

*விலாசம்:—*
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்


பல ரகம்வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

S இராமநாதன் *காரியதரிசி கத்தர் இலாகா*

*விலாசம்:—*
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
*கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)*



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துள்ள பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

## குடி அரசு.

குரோதன-ஹு பங்குனி-மீ கஅ-உ

## இரண்டே வாரம்.

நமது "குடி அரசு" ப்பத்திரிக்கை கொஞ்சக் காலமாக கூலி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு வந்தது. ஆனால் அவ்வச்சுக்கூடத்தால் பல தடவைகளில் எதிர்பாராத, தாமதங்களுடன் காலந்தவறி பத்திரிக்கை வெளியாகவேண்டி ஏற்பட்டது. நிமித்தம், சந்தாதாரர்களில் பலர், ஏமாற்றமடைய நேர்ந்ததால் தங்கள் மனவருத்தத்தையும், கோபத்தையும் தெரிவித்து வருகிறார்கள். "குடி அரசு" எத்தனைவித மான எதிரிகளின் சூழ்ச்சிக்கும், கொடுமைக்கும் தப்புவித்து நடந்து வருகிறது என்பதை அவர்கள் அறிவதில்லை. ஆதலின் பத்திரிக்கையை இரண்டொரு வாரத்திற்கு மட்டும் நிறுத்தி வேறு அச்சுக்கூடம் ஏற்பாடு செய்து, கூடியவரை காலந்தவறாது அனுப்பிவர ஏற்பாடு செய்ய சில யந்திரங்களும், எழுத்துக்களும், வருத்தியிருக்கிறது. இனியும், சில சாமான்கள் வாங்க சென்னைக்கு ஆள் போகிறது, ஆதலால் அதுவரை வாசகர்களை மன்னிக்கும்படி வேண்டுகிறோம்.

## சூனையற்ற பொய்.

நல்ல சமயத்தில் 2 வாரத்திற்குப் பத்திரிக்கை தாமதிக்க ஏற்பட்டதானது நமக்கு மிகுதியும், ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டதோடு வாசகர்களுக்கும் விளக்க முடியாத ஏமாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறோம். இவ்வாரம் எழுத வேண்டிய விஷயங்கள் அநேகம். அவற்றில் பிராமணப் பத்திரிக்கைகளின் கொடுமையை எடுத்துக்காட்ட வேண்டியது மிகுதியும் அவசியமான சமயம். அவைகளை விளக்க இதில் இடமில்லை. கோவை தாலூக்கா மகாநாட்டைப்பற்றியும், கோவை பொது மீட்டிங்கைப் பற்றியும், சுதேசமித்திரன் சூனையற்ற வெறும் பொய்யையே பிரசுரித்திருக்கின்றது. அவற்றுள் 100-க்கு 90 பொய் என்பதை வாசகர் உணரவேண்டுகிறோம்.

## ஜாதிப்புத்தி.

'சுதேசமித்திரனும்' சில நிருபர்களும்.

ஸ்ரீமான்கள் இராமநாதன், இக்னேஷியஸ், ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஆகிய மூவரும் வெள்ளக்கிணர் கோயமுத்தூர் தாலூக்கா கான்பரன்சிலும் கோயமுத்தூர் மகாநாட்டிலும் பேசிய பேச்சைப்பற்றியும், கூட்டத்தைப்பற்றியும், எனத்தனமான சில பொய்யுரைகளை 'சுதேசமித்திரன்' "நமது நிருபரிடமிருந்து" என்று பிரசுரித்திருக்கிறது. இம்மாதிரியான பொய் நிருபங்கள் வெளியாவதைப்பற்றிப் பலமுறை பலர் சுத்த ரத்தமில்லாதவருக்கும், சூனைவரும்படி எழுதியும் பேசியும், இருந்தும் மறுபடியும் மான வெட்கமில்லாமல் அதே மாதிரி எழுதுவதானல், இதற்கு மேல் என்ன செய்வது? மானமுள்ள ஆயிரம் பேரை ஜயித்தாலும், மானமில்லாத ஒருவரை ஜயிப்பது கஷ்டம் என்று 'குடி அரசு' முன் ஒரு தடவை எழுதினது ஞாபகத்திற்கு வருகிறது.

ஆகையால் சுயமரியாதை இல்லாத ஜாதிக்குப்புத்தி வரும்படி செய்வது கடினமான காரியமாயிருக்கிறது. தங்களுக்கு மானமும், சுயமரியாதையும் இல்லையென்கிற காரணத்தால், என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்று அவர்கள் துணிந்துவிடுகிறார்கள். இந்த சூனை அற்ற ஜாதிக்குச் சூனையும், சுயமரியாதையும் வருந்தாமல் சுயராஜ்யம் அடைவதென்பது ஆகாத காரியம். ஆகையால் வாசகர்கள் செய்யவேண்டிய முக்கிய தேச சேவையானது, இப்போலிப் பத்திரிகைகளின் தன்மையைப் பாமர ஜனங்கள் அறியும்படி செய்வதும், உண்மையான பத்திரிகைகளைப் பரப்புவதும் தான், இதற்கேற்ற வழியாகும்.

நிருபர்.

## ஸ்ரீமான். தங்கப்பெருமாள் பிள்ளையின் ஞாபகச்சின்னம்.

வெள்ளக்கிணற்றில் ஸ்ரீமான். எஸ். இராமநாதனின் அக்ராசனத்தின் கீழ் நடைபெற்ற கோயமுத்தூர் தாலூகா மகாநாட்டில், அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேறிற்று. தமிழ் நாட்டு அருந்தவப் புதல்வரும், மாகாண காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியும், ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும், கோவை தாலூக்கா மகாநாட்டின் அக்ராசனரும், மாகாண காங்கிரஸ் நிர்வாக சபையின் அங்கத்தினரும், கதர் போர்டின் காரியதரிசியும், ஆகிய இவைகளாயிருந்தவரும், உண்மைத்தியாக மூர்த்தியுமாகிய, ஈரோடு ஸ்ரீமான். வா. மு. தங்கப்பெருமாள் பிள்ளையவர்கள் காலஞ்சென்றதைக்குறித்து இம்மகாநாடு ஆழ்ந்த துக்கத்தை அடைவதோடு, அவர் குடும்பத்தாருக்கு அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

காலமான நம்நாட்டுப் பெருந்தேசாபிமானியும், நமது ஜில்லா வாசியுமான ஸ்ரீமான். தங்கப்பெருமாள் பிள்ளையின் ஞாபகச் சின்னமாகவும், அவரது போதனைகளைப் பரப்பஓர் சாதனமாகவும், இந்த ஜில்லாவில் ஓர் ஸ்தாபனம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், அதற்காகப் பொருள் சேர்த்தல் முதலிய வேண்டுவன செய்ய, கீழ்க்கண்ட கனவான்களை ஓர் கமிட்டியாக நியமித்திருப்பதாய்த் தீர்மானித்திருக்கிறது.

### கமிட்டி அங்கத்தினர்.

ஸ்ரீமான்கள்.
ஈ. வெ. இராமசாமி நாயக்கர், அக்ராசனர்.
எஸ். இராமநாதன், காரியதரிசி.
ஈரோடு, எம். எஸ். முத்துக்கருப்பன் செட்டியார், பொக்கிஷதார்

கோயமுத்தூர், டி. ஏ. இராமலிங்கம் செட்டியார், சி. வி. வெங்கட்டரமணையங்கார், வி. ஸி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், ஆர். கே. ஷண்முகம் செட்டியார், அத்திப்பாளையம் என். இராமகிருஷ்ண நாயக்கர், திருப்பூர் கே. ஆர். ஈஸ்வரமூர்த்தி கவுண்டர் அங்கத்தினர்கள்.

### நமது குறிப்பு.

இம்முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றியதை நாம் மிகுதியும் பாராட்டுகிறோம். பொதுஜனங்களும் அவரது ஞாபகக்குறிப்பிற்குத் தங்கள் தங்களாலான உதவியைச்செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். பணம் அனுப்புகிறவர்கள் ஈரோடு ஸ்ரீமான் எம். எஸ். முத்துக்கருப்பன்செட்டியாரவர்கள் பேருக்கு அனுப்பிக்கொடுக்க வேண்டுமாய்க் கோருகிறோம். இத்தீர்மானம் நிறைவேறியவுடன் ஸ்ரீமான்கள் டி. ஏ. இராமலிங்கம் செட்டியார், ஈ. வெ. இராமசாமி நாயக்கர், வி. ஸி. வெள்ளியங்கிரிக்கவுண்டர், சி. வி. வெங்கட்டரமணஐயங்கார், ஆர். கே. ஷண்முகம் செட்டியார், ஆகிய ஐவர்களும் ஆளுக்கு 100-ரூபாய் வீதம் 500-ரூபாய்க்குக் கையொப்பம் செய்ததை முழுமனதுடன் பாராட்டுகிறோம்.

### முக்கிய குறிப்பு.

இப்பேர்ப்பட்ட பிராமணரல்லாத தேசபக்தர் காலமானதைக் குறித்து பிராமணப்பத்திரிகைகளில் தலைசிறந்து விளங்கும் 'ஹிந்து' பத்திரிகை ஒரு வார்த்தையாவது எழுதவே இல்லை. இப்பத்திரிகையைத்தான் நமது டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள், மகாத்மாவிடம் யோக்கியமான பத்திரிகை என்று சொன்னாராம்.

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.

...டியார், (இந்தியா)